بسم الله الرحمن الرحيم

# *Friday Sermon 24/07/2015*

**(07 SHAWWAL 1436 HIJRI)**

## *பூமியில் மனிதன் வாழ்வதன் நோக்கம்*

## THE VALUE OF THE EXISTENCE OF MAN ON EARTH

## HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

உலகமக்களுக்கு சலாம் தெரிவித்துக் கொண்டு, தஷஹ்ஹீதும் தஅவுசும் அல் பாத்திஹாவும் ஓதிய பிறகு ஹஸ்ரத் கலீ:.பத்துல்லாஹ் முனீர் அஹமது அஸீம் (அ) அவர்கள் கீழ் வருமாறு உரையாற்றினார்.

பூமியில் மனித தோற்றம் சுயமாக உருவாகிக் கொண்டதோ, உண்மையைக் கொண்டல்லாமல் நிகழ்ந்ததோ அல்ல! குறிப்பான, ஒரு உண்மை நோக்கத்துடன் இறை விதிப்படியே அவனது படைப்பு தோற்றியது என்பதில் சந்தேகமில்லை. மிக உன்னதமான படைப்பாளன் அல்லாஹ்வே தான் என்றும் அவனது படைப்புகளில் சிறந்தது மனிதனே தான் என்றும் மிக தெளிவாக நமக்கு கூறிக் கொள்ள முடியும். ஏனெனில் அல்லாஹ் கூறிகின்றான்.

**“நிச்சயமாக, நாம் ஆதமுடைய சந்ததியைக் கண்ணியப்படுத்தினோம் இன்றும் கடலிலும் கரையிலும் அவர்களை சுமந்து அவர்களுக்காக சகல உணவும் மற்றும் பொருட்களையும் அளித்து, நாம் படைத்துள்ள பலவற்றையும் விட அவர்களை மேன்மைப்படுத்தினோம்”. (17:17)**

மற்று படைப்பினங்கள் மீதான மனிதனின் அறிவும் அதிகாரவும் பல்வகைப்பட்டதாகும். ஒவ்வொரு விஷயத்திலும் மிக சுதந்திரமாக தீர்மானங்கள் எடுத்துக் கொள்வதற்கான வாய்ப்பு அல்லாஹ் மனிதனுக்கு அளித்துள்ளான். நன்மையும் தீமையும் பகுத்தறிவதற்கான ஆற்றல் மனிதனுக்கு வழங்கியிருப்பதோடு, அல்லாஹ் படைத்த ஒரு ஆன்மாவும் அவனுக்கு அளித்திருக்கின்றான் என்று மட்டுமல்லாமல் அவனை மனிதனாக பரிணமிக்கச் செய்வதற்கு அவன் மீது அல்லாஹ் தன்னுடைய சுவாசம் ஊதிக் கொள்ளவும் செய்திருக்கின்றான். சில இறை பண்புகளின் தன்மையுடையவனுமாவன் அவன். அருள் நிறைந்த தன் நூலில் அல்லாஹ் மனிதனை புகழ்ந்துக் கூறவும் செய்துள்ளான்.

**“நிச்சயமாக நாம் மனிதனை மண்ணிலிருந்துள்ள சத்தினால் படைத்தோம். பின்னர் நாம் அவனை ஒரு பாதுகாப்பான இடத்தில் இந்திரியத்துளியாக்கி வைத்தோம். பின்னர் அந்த இந்திரத்துளியை அலக் என்ற நிலையில் ஆக்கினோம். பின்னர் அந்த அலக்கை ஒரு தசைப்பிண்டமாக்கினோம். பின்னர் அத்தசைப்பிண்டத்தை எலும்புகளாகவும் ஆக்கினோம். பின்னர் அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம். பின்னர் நாம் அதனை வேறு ஒரு படைப்பாக செய்தோம். அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன், மிக அழகான படைப்பாளன்.” (23. 13-15)**

ஆகவே மற்று படைப்பினங்களுக்கு மேலாக மனிதனுக்கு அளித்துள்ள அதிகார மேன்மையும் மதிப்பும் அவன் அங்கீகரித்துக் கொள்ள வேண்டும். மனிதனுக்கு சமமாக எடுத்துக் காட்டிட மற்றொரு படைப்பினமும் இல்லையென்ற நிலையில் அவன் நிகரற்றப் படைப்பினம் ஆவான். மனிதனின் ஆன்மாவும் அவனது உடம்பும் படைத்தவனின் வரபிரசாதம் ஆகும். அதாவது அல்லாஹ்வின் மிக அழகான ஒரு பரிசாகும். தன்னுடைய இரட்சைக்கும் பாதுகாப்புக்கும் கேடு விளைவிக்காமல் கவனித்துக் கொள்ள வேண்டியது மனிதனின் கடமையேயாகும். இந்த உண்மையினை மனிதன் புறக்கணித்தால், பூமியில் அவனுடைய வாழ்க்கையின் நோக்கத்தைக் குறித்து அவன் ஜக்கிரதையுடையவனாக மாறிவிடாமலிருந்தால், அவன் கண்களில் அதற்கு எவ்விதமான மதிப்பும் இல்லாமால் இருந்தால், மனிதனின் இயல்பான இறை நன்மைக்கு தடங்கல் எற்படவும் அது செயலற்றதாக மாறிவிடவும் செய்யும். அந்நிலையில் மற்று உயிரினங்களைப் போன்று ஒரு உயிரினம் மட்டுமே நான் என அவன் எண்ணுகின்றான். அந்த உயிரினங்களைப் போல் ஒரு ஆரம்பமும் ஒரு முடிவும் என்பதை தவிர்த்து மற்றெதுவுமில்லை! லட்சக்கணக்கான வாழ்க்கைகள் இழந்ததற்கு முக்கியமான காரணமும் அவ்வகைப்பட்ட சிந்தனையாகும். தூய சிந்தனையில்லாத காரணத்தால் முழுமையாக அழிவுக்கு ஆளான எவ்வளவு சமூதாயத்தினரை காணலாம்? கொலை என்பது, ஒவ்வொரு நாளும் முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாக இடம் பெற்றுக் கொள்ளுகின்ற பெரிய அபாயமாக மாறியிருக்கின்றது. ஒவ்வொரு நிமிடவும் கொலையைப் பற்றிய செய்திகள் நாம் கேட்கின்றோம். ஆனால் இந்த கொலைகளுக்கான காரணங்கள் மிக சிறிதானதாகும். சில வேளை ஒரு சிகரட் அல்லது ஒரு சிறு அளவிலான பணம், அல்லது பொறாமை, அல்லது குலைந்து போன காதல், இவை ஏதேனுமாகலாம். ஆனால் அல்லாஹ் விலக்கியுள்ள மனிதனை, கொலை செய்வதற்குத் தடை விதித்திருக்கின்றது.

**“அல்லாஹ் விலக்கியிருக்க நீங்கள் எந்த மனிதனையும் நியாமான காரணமின்றிக் கொலை செய்து விடாதீர்கள். எவரேனும் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டு விட்டால் அவருடைய வாரிசுக்கு பதில் செய்யவோ அல்லது மன்னிக்கவோ நாம் அதிகாரம் கொடுத்திருக்கிறோம். ஆனால் கொலையின் மூலம் பதில் செய்வதில் வரம்பு கடந்து விடக் கூடாது. நிச்சயமாக கொலையுண்டவரின் வாரிசு (நீதியைக் கொண்டு) உதவி செய்யப்பட்டவராவார்” (17.34)**

கொலை, கூட்டக் கொலைகள் போலவே அனுதினம் நிகழுகின்ற மற்றொரு மாபெரும் அபாயமாகும் தற்கொலை. ஒருவரின் வாழ்க்கையினை அந்நபரே முடித்துக் கொள்வது மிக கடுமையான பாவமாகும். அதாவது அவ்வாறு செய்வதை படைத்தவனாகிய அல்லாஹ் தடை விதித்துள்ளான்.

**“நீங்கள் உங்களையே கொலை செய்து கொள்ளதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களிடம் மிக கருனையுடையவனாக இருக்கின்றான்.” (4.30)**

நமக்கு வாழ்க்கையை அளித்ததுக் கொண்டது அல்லாஹ்வேயென்றால் நாம் எதற்கு அதை அழித்துக் கொள்ளவேண்டும்? இன்று நிகழ்ந்து வருகின்ற விஷயங்கள் யாவும் வேதனை விளைவிக்கக் கூடியவை என்று மட்டுமின்றி பயங்கரமானதுமாகும், குறிப்பாக இளைஞர்களில் நிகழ்ந்து வருவது! அவர்களுக்கு அவர்களின் உயிரிழப்பு, வேற்றுமையும் வீணானதுமான விஷயங்களின் பெயரிலாகும். தேர்வில் தோல்வியடையல், வேலை தேடிக் கொள்வதில் நேரிடும் வருத்தம், பெற்றோர்களுடனுள்ள கருத்து வேறுபாடு, போன்ற பல்வகை காரணங்களுமாகலாம். அவ்வகை விவகாரத்திலிருந்துள்ள தீர்வுக்காக வாழ்க்கையினை முடித்துக் கொள்வதே நன்கு என அவர்கள் எண்ணுகின்றார்கள். அதன்படி தற்கொலைக்கு ஆளாகின்றார்கள். தற்கொலை ஒரு பாவமாகும். அது செய்போர்கள் கியாமத் நாளில் மிக பெரிதான வேதனைகளுக்கும் விளைவுகளுக்கும் ஆளாக்கப்படுவார்கள். அபூகுறைரா( ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்திருக்கின்றார்.

திருதூதர் (ஸல்) கூறினார்கள்.

**“கத்தியால் குத்தி சுயமாகவே மரணப்படுகின்றவர்கள் என்றென்றும் நரகத்தில் வசிப்பார்கள். சுயமாகவே விஷம் புசித்து மரணப்படுகின்றவர்கள் விஷம் புசித்து புசித்து நரகத்தில் என்றென்றும் வசிப்பவார்கள். மலையின் உச்சியிலிருந்து குதித்து சுயமாகவே மரணப்படுகின்றவர்களும் என்றென்றும் நரகத்தில் வசிப்பார்கள். அவர்கள் அங்கு சுயமாகவே குதித்து விழ்ந்து கொண்டிருப்பார்கள்” (மூஸ்லீம்).**

இந்த கடினமான தண்டனை மிக தெளிவாக நமக்கு புரியவைத்துக் கொள்வது, தற்கொலை செய்போர்களுக்கு பரலோகத்தில் ஓய்வில்லை என்றாகும். இவ்வகையான சூழ்நிலைக்குக் காரணம் நம்பிக்கை இழப்பே என்றால், புரிந்துக் கொள்ளுங்கள், பரலோகத்தில் உங்களை காத்திருப்பது முற்றிலும் இழிவானதாகும். நாம் ஒவ்வொரு வரும் முஸ்லீமாகயிருந்தாலும் அல்லது அம்முஸ்லீமாகயிருந்தாலும் சரி, நமது வாழ்க்கையின் சரியான மதிப்பைக் குறித்து உணர்ந்தவர்களாக மாறிட சற்று நன்கு சிந்தியுங்கள். இந்த இறை வரபிரசாதத்தை நமக்கு

பாதுகாத்துக் கொள்வோம்; காலையிலும் மாலையிலும்! ஏனையவர்களுடைய உயிரினை நமக்கு ஆதரித்துக் கொள்வோம். அல்லாஹ்வின் வசனத்தைக் குறித்து நமக்கு ஆழமாக சிந்திப்போம்.

**“இதன் காரணமாகவே நிச்சயமாக எவன் ஒருவன் கொலைக்குப் பதிலாகவோ அல்லது பூமியில் ஏற்படும் குழப்பத்தையன்றி மற்றொருவரைக் கொலை செய்கின்றானோ அவன் மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன் போலாவான். மேலும் எவறொருவர் ஓராத்மாவை வாழ வைக்கின்றாரோ அவன் மக்களை யாவரையும் வாழவைப்பவரைப் போலாவார் என்றும் இஸ்ராயீலின் சந்ததியினருக்கு விதித்தோம்.” (5-33)**

நமக்கு உயிரினை அளித்தது இறைவனாவான். அவன் விரும்பும் போது அதை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டியதும் அவனே ஆவான். மரணத்தோடு வாழ்க்கை முடிந்துவிடும் என எண்ணி விடாதீர்கள். வாழ்க்கையில் ஒரு பொழுதும் நம்பிக்கையை இழக்காதீர்கள். நம்பிக்கையை இழப்பது சாத்தானின் செயலாகும். தங்களைப் படைத்தவனை அங்கீகரித்துக் கொள்ளாதவர்களே நம்பிக்கையை இழப்பவர்கள். உங்களை அல்லாஹ்வில் அற்பித்து விடுங்கள். காரணம் **“ஆதலின் நிச்சயமாகத் துன்பத்துடன் இன்பம் இருக்கின்றது” (94.6)**

கோபம், அமிதமான ஆசை, வெறுப்பு இவை மோசமான போதனைகளாகும். அதனைக் கட்டுப்படுத்திட கற்றுக் கொள்ளுங்கள். உங்களை எதிர்த்து கொள்பவர்களுக்கு மன்னிப்பு அளியுங்கள். எல்லா சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியுடையவனாகயிருங்கள். நம்மிடம் அல்லாஹ் கருணைக் காட்டிக் கொள்வானாக! நமக்கு மன்னிப்பு அளிப்பானாக! ஆமீன் யா ரப்பல் ஆலமீன்.


**Issued by:**

Jamaat Ul Sahih Al Islam

*Dawa Department*

Tamil Nadu (Regd. No. A/693)

**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Translated by:**

**Azim Ahmad**

Sadr Sahib'ul Faraj

Kerala/Tamil Nadu

**E-Mail:** azimahmad070@gmail.com

**Cell:** 9947181650

9789180817